# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பில் நடைபெற்ற இளம் பேச்சாளர்களுக்கான பயிற்சி முகாம் 2-வது நாள் காட்சிகள்!










கழக இளைஞர் அணி சார்பில், நடைபெற்ற இளம் பேச்சாளர்களுக்கான பயிற்சி முகாமில், 'வரலாறு கற்போம்' எனும் தலைப்பில் இளம் பேச்சாளர்கள் கற்றுக்கொள்ள வேண்டியவை என்ன என்பதை கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி தனக்கே உரிய பாணியில் பாடல்களோடும் நகைச்சுவை கலந்தும் மிகச்சிறப்பாக விளக்கினார்.





சென்னை அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் தி.மு.க. இளைஞர் அணி சார்பில் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னெடுப்பில் 2வது நாளாக நடைபெற்ற இளம் பேச்சாளர்களுக்கான பயிற்சி முகாமில் உலகத் தத்துவங்கள் மற்றும் தலைவர்கள் குறித்து, தத்துவம் தெளிவோம், தலைவர்கள் அறிவோம் எனும் தலைப்பில் திராவிடர் கழகப் பிரச்சார செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி செரிவான கருத்துகளை வழங்கி மிகச்சிறப்பான உரை ஆற்றினார்.






கழக இளைஞர் அணி சார்பில், இளம் பேச்சாளர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாமின் ஒரு பகுதியாக, 'கேட்க அதற்குத் தக!' எனும் தலைப்பில் திராவிட இயக்கம் குறித்த மிகச்சிறப்பான வினாடி – வினா நிகழ்ச்சியை, கழகத் தகவல்தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின் மிக நேர்த்தியாக நடத்தினார்.

### மக்கள் வரிப்பணத்தை வைத்து பா.ஜ.க. அரசியல் செய்கிறது என்பதற்கு

# ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானின் பேச்சே உதாரணம்!

## அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் பதிலடி!

சென்னை, பிப். 19 -

மக்கள் வரிப் பணத்தை வைத்து பா.ஜ.க. அரசியல் செய்கிறது என்பதற்கு ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானின் பேச்சே உதாரணம் என்று அமைச்சர் பி.டி.ஆர். பழனி வேல் தியாகராஜன் பதிலடி கொடுத்துள்ளார்.

அது வருமாறு: -

பல 10 ஆண்டுகளாக தேசிய அளவில் கல்வியில் சிறந்த விளைவு எங்கு கிடைக்கிறது எத்தனை சதவிகிதம் படிக்கிறார்கள் எத்தனை நபர்கள் பட்டதாரிகள் ஆகிறார்கள் என்ற எந்த ஒரு அளவுகோல் எடுத்தாலும் பொதுவாக தென் மாநிலங்களில் குறிப்பாக தமிழ்நாட்டில் உயர்ந்த இடத்தில் இருக்கிற சூழ்நிலையில் டெல்லியில் கல்விக்கொள்கையினை உருவாக்கி பீகாரிலோ, ராஜஸ்தானிலோ, ஏன் குஜராத்திலோ தமிழ்நாட்டை ஒப்பிடுகையில் பாதி அளவிற்கு வர முடியாத மாநிலங்களில் பெரும்பான்மை பெற்ற ஒரு கட்சியும் அதனால் உருவாக்கப்பட்ட ஒரு அரசாங்கமும் அவர்களை விட 10 மடங்கு முன்னேறிய மாநிலத்தை நாங்க சொல்ற கொள்கையைத்தான் நீங்கள் பின்பற்ற வேண்டும் என சொல்வது உலகத்திலேயே ஆச்சர்யமாக இருக்கிறது. இதனை அதிர்ச்சி உருவாக்கும் செயலாகத்தான் பார்க்க வேண்டும்.

பேரறிஞர் அண்ணா கூறிய படி தமிழ்நாடு கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் இரண்டு மொழிக் கொள்கை இருமொழிக் கொள்கையை சிறப்பாக செயல்படுத்தி உலக அளவில் இன்றைக்கு நம் இளைஞர்கள் பல சிறந்த பணிகளிலும் அரசு உயர் பொறுப்புகளிலும் இருக்கிறார்கள்.நமது கல்வித்திட்டத்தில் இருமொழிக்கொள்கையில் குறை மட்டும் இல்லை என்பதைத் தாண்டி நிறை இருக்கிறது என்பதை நிரூபித்துள்ளோம்.



இருமொழிக்கொள்கை கூட செயல்படுத்த முடியாத பல மாநிலங்களில் ஒரு மொழியை வைத்து அதையும் கூட சரியாக செயல்படுத்தாத மாநிலங்கள் நீங்கள் எங்களுடைய கொள் கையை தான் பயன்படுத்த வேண்டும் எனச் சொல்வது பொருத்தமற்றது இதையெல்லாம் தாண்டி சட்டமைப்பின் படி மாநில அரசுக்கென சில உரிமைகள் இருக்கிறது. ஒன்றிய அரசிற்கு சில உரிமைகள் இருக்கிறது. சில பொது பட்டியலில் இருக்கிறது.

ஆனால் கொள்கை விருப்பமாக சட்டத்தில் இடம்பெறாத புதிய கல்விக் கொள்கையை கொண்டு வந்து விட்டு நீங்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டால் உங்களுக்கு ஜனநாயக முறைப்படி சட்டமைப்பு படி 15 வது நிதிக்குழு படி தர வேண்டிய நிதியை தர முடியாது எனச்சொன்னால் இது கொடூரமான சர்வாதிகாரி செய்யும் வேலை. மக்கள் வரிப்பணத்தை வைத்து அரசியல் செய்கிறோம் என்பதை ஒன்றிய அமைச்சர் தனது வாயாலே ஒப்புக் கொண்டு விட்டது நல்ல விஷயமாகும்.

முதலமைச்சர் சட்டமைப்பில் எங்கே இடம் பெற்றுள்ளது என மிக தெளிவாக கேள்வி எழுப்பி உள்ளார். உச்சநீதிமன்றத்தில் இந்த விவகாரம் போய் நிற்க போகிறது. ஒரு மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின் படி சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பரிந்துரையை வழங்கப்பட வேண்டிய பணத்தை வழங்காமல் கட்டாயப்படுத்தி வெளிப்படையாக பேசி இருப்பது சட்டமைப்புக்குவிரோதமானது. சட்டமைப்பால் நடத்தப்படுகிற ஒரு நாட்டில் ஒன்றிய அமைச்சரின் வார்த்தையை நீதிமன்றம் கண்டிக்கும் என நான் நம்புகிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவல்லிக்கேணி, பார்டர் தோட்டம் பகுதியில் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள காவல் உதவி மையத்தை திறந்து வைத்து, சிறப்பு இருசக்கர ரோந்து வாகனங்கள் சேவையை கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ.அருண், கூடுதல் காவல் ஆணையாளர் (தெற்கு) முனைவர் நா.கண்ணன் ஆகியோர் உடன் உள்ளனர்.